**செ. கு. எண்**: 46 **நாள்**: 14.02.2013

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 14.2.2013

சென்னை பெருநகர காவல், அரசு ஸ்டான்லி மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. D.செல்வராஜ் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 8.2.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தருமபுரி மாவட்டம், அரூர் உட்கோட்டம், திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவு பிரிவில் (Organised Crime Intelligence Unit) சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு பா. ரவிச்சந்திரன் அவர்கள் 9.2.2103 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. S.கண்ணன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 11.2.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. D.செல்வராஜ் அவர்கள் 10.2.2013 மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், மல்லி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.ரமேஷ் அவர்கள் உடல் நலக் குறைவால் 11.2.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. செல்வராஜ், திரு. ரவிச்சந்திரன் மற்றும் திரு. கண்ணன், தலைமைக் காவலர் திரு. செல்வராஜ், முதல் நிலைக் காவலர் திரு. ரமேஷ் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் நலக்குறைவால் காலமான காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. செல்வராஜ், திரு. கண்ணன் முதல் நிலைக் காவலர் திரு. ரமேஷ், மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் மற்றும் தலைமைக் காவலர் திரு. செல்வராஜ் ஆகியோர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**